தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

பங்குனி 30, ஸ்ரீமுக – திருவள்ளுவர் ஆண்டு 2025
1994, ஏப்ரல் 13, புதன்கிழமை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. இரா. முத்தையா அவர்கள் தலைமையில் காலை 10.00 மணியளவில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

"சமன்செய்து சீர்தூக்குங் கோல்போல் அமைந்தொருபால்
கோடாமை சான்றோர்க் கணி."

துலாக்கோல் போல் சமமாக நின்று ஏதொன்றிலும் தீர்ப்பு வழங்குவதே சான்றோர்க்கு அழகான பண்பாகும்.

1. இரங்கல் குறிப்பு

முன்னாள் உறுப்பினர் மறைவு.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இரங்கல் குறிப்பு. தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முன்னாள் உறுப்பினரான திரு. பி. எம். முனுசாமி கவுண்டர் அவர்கள் 7-4-1994 அன்று மறைந்ததை இப்பேரவைக்கு வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன். திரு. பி. எம். முனுசாமி கவுண்டர் அவர்கள் 1957 ஆம் ஆண்டு முதல் 1962-ஆம் ஆண்டுவரை சேலம் மாவட்டம் அரூர் பொதுத் தொகுதியிலிருந்தும், மற்றும் 1967-ஆம் ஆண்டு முதல் 1971-ஆம் ஆண்டுவரை, தர்மபுரி மாவட்டம், கிருஷ்ணகிரி தொகுதியிலிருந்தும் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்கு இருமுறை தேர்ந்தெடுக்கப்பட்டு, போற்றத்தக்கவகையில் பணியாற்றியுள்ளார். அன்னாரது மறைவு குறித்து அவரை இழந்துவிட்ட குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தினையும் இப்பேரவையின் சார்பிலும், என் சார்பிலும் தெரிவித்துக்கொள்கிறேன். மறைந்த அப்பெரியவருக்கு அஞ்சலி செலுத்தும்வகையில், மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரண்டு மணித்துளிகள் அமைதி காக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரண்டு மணித்துளிகள் அமைதி காத்தனர்.)